**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness : **39**

| | | | |
|---|---|---|---|
| Name: | **ஹாஜாமைதீன்** | Caste: | |
| Father'sName: | செய்யது சுலைமான் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1, A2,A3, A12, A19, A24 present. Others absent. Petition U/s 317 filed and allowed.

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **13.03.2023**

**முதல் விசாரணை**:

நான் தென்காசியில் வடக்கு மவுண்ட் ரோட்டில் குடியிருக்கிறேன். நான் ஆட்டோ ஓட்டி வருகிறேன். நான் 15 வருடங்களாக ஆட்டோ ஓட்டி வருகிறேன். முன்னதாக சொந்தமாகவும் ஆட்டோ வைத்திருந்தேன். அந்த ஆட்டோவை நான் தான் ஓட்டி வந்தேன். TN 76 B 9529 என்ற ஆட்டோ வைத்திருந்தேன். என் உடன் பிறந்தவர்கள் 3 நபர்கள். எனக்கு மூத்தவர்-மசூதுஅலி, எனக்கு இளையவர்-நாகூர்மீரான் ஆவார். எனது அண்ணன் ரியல்எஸ்டேட் மற்றும் வீடுகட்டும் நபர்களுக்கு பொருட்கள் சப்ளே செய்யும் இடை தரகறா இருந்து வருகிறார். எனது தம்பி நாகூர்மீரான் 2007 ம் ஆண்டு என் தம்பியை யாரோ வெட்டி கொன்றுவிட்டார்கள் என்று கேள்விப்பட்டேன். TN 76 B 9529 என்ற ஆட்டோவை நான் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து

திரும்ப பெற்றுக்கொண்டேன். என் ஆட்டோ 2007 ம் ஆண்டு பலுதடைந்து விட்டதால் அதை வீட்டில் நிறுத்தி விட்டு ஆந்திராவுக்கு கூலிவேலை செய்ய சென்றுவிட்டேன். சம்பவம் நடந்த மறுநாள் என் வீட்டில் இருந்த ஆட்டோவை துாக்கி சென்றுவிட்டார்கள். நான் அதன் பின்னர் 2-3 நாட்கள் கழித்து நான் ஊர் திரும்பியபோது ஆட்டோவை போலீசார் எடுத்து சென்றதாக தெரியவந்தது. என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் எனக்கு சொந்தமான TN 76 B 9529 என்ற ஆட்டோ உள்ளது என்றும் அந்த ஆட்டோவை நானும் என் தம்பி நாகூர் மீரானும் மாறி மாறி ஓட்டுவோம் என்றும் கடந்த 14.08.2007 ம் தேதி காலை சுமார் 8.00 மணிக்கு என் தம்பி நாகூர் மீரான் அந்த ஆட்டோவை எடுத்து கொண்டு போனான் என்றும் அன்று கூலக்கடை பஜாரில் நடந்த கலவரம் சம்பந்தமாக எனது ஆட்டோவை போலீசார் கைப்பற்றி கொண்டுபோய்விட்டதாக தெரிந்துகொண்டதாகவும் இது சம்பந்தமாக சேரன்மாதேவி காவல் துணைகண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தம்பியின் நண்பர்கள் பெயர் தெரியாது. ஹனிபா, அபுபக்கர் சித்திக், சிக்கந்தர், திவான் ஒலி, அபுபக்கர் ஆகிய யாரையும் எனக்கு தெரியாது. எனக்கும் என்

சகோதரர்களுக்கும் மேற்படியார்கள் நண்பர்கள் அவர்களை இவ்வழக்கில் இருந்து காப்பாற்ற பொய் சொல்கிறேன் என்றால் ச ரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

-